என்றால் ஏராளமான போராட்டங்கள் வந்து சேரும். இந்தியத் தாய்நாடு விடுதலை பெறுவதற்காக—விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளின் பட்டியல்தான் சேகரிக்கப்படுகிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கு கல்விச் சலுகை அளிப்பதற்கு வருவாய்-வருமான வரம்பு ஏதாவது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா ? விதிக்கப்பட்டிருந்தால் விதிவிலக்கு அளிக்கப் படுகிறதா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதன் விவரக்குறிப்பு இப்போது என்னிடத்தில் இல்லை. சில குறிப்பிட்ட நிபந்தனைகள் எல்லாம் அமைந்திருக்கின்றன. அந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டே உதவி அளிக்கப் படுகிறது.

**திரு. கு. காமாட்சி :** விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளின் குழந்தைகளுக்கே சலுகை அளிக்கப்படுகிறது, தமிழ்த் தியாகிகளின் குழந்தைகளுக்கு கல்விச் சலுகை அளிக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பின்னாலாவது வழங்குவதற்கு ஏதாகிலும் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்போது அதுபற்றிய செயற்குறிப்பு இல்லை.

### *Bharata Natyam Course*

* 29. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to introduce Bharata Natyam Courses in Schools and Colleges in this State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) பள்ளிகளில் உடற்பயிற்சிக்குப் பதிலாக பெண்களுக்குப் பரத நாட்டியம் கற்றுக் கொடுக்கலாம் எனச் சென்னையிலுள்ள லலிதா சுப்பிரமணியம் பரத நாட்டியப் பள்ளி 1—3—1972 அன்று யோசனை கூறி உள்ளது. அந்த யோசனை ஆய்வு செய்யப் பட்டுவருகிறது.

கல்லூரிகளில் பரதநாட்டியத்தைப் பாடமாகச் சேர்ப்பது பல்கலைக்கழகங்களைப் பொறுத்ததாகும்.

1972 ஆகஸ்ட் 10]

THIRU N. DENNIS : May I know from the Hon. Minister whether this subject will be included at least in Music Colleges to give patronage to the ancient arts which would give exercise to youngsters?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கர்நாடக சங்கீதக் கல்லூரியில் சென்ற ஆண்டு முதல் பரத நாட்டியக் கலையும் சேர்க்கப்பட்டு, சொல்லிக்கொடுக்கப்படுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 'பள்ளிகளிலும், கல்லூரிகளிலும்' என்று பொதுப்படையாக கேள்வி இருக்கிறதே, இதில் ஆண்கள் பள்ளிகளும், கல்லூரிகளும் சேர்ந்ததா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆண்களுக்குச் சொல்லிக் கொடுப்பதிலும் தவறு இல்லை. பெரும்பான்மையும் பெண்களுக்கு நாட்டியம் சொல்லிக் கொடுக்கிறவர்கள் எல்லாம் ஆண்களாக இருக்கிறார்கள். முதலில் ஆண்கள் பயிற்சி பெற்றால்தான் பின்னால் பெண்களுக்கும் பயிற்சியளிக்க முடியும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, there are a number of students in elementary schools—both girls and boys—who have got special aptitudes for music. Unless they are taught in the elementary schools they cannot cultivate the habit. So may I know whether arrangements would be made to teach music in the elementary schools itself?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எலிமெண்டரி வகுப்புகளில் அத்தகைய வாய்ப்புகள் அளிக்கப்படவில்லை. உயர்நிலைப் பள்ளிகளில் விருப்பப் பாடமாக எடுத்துக்கொள்ள இசைப்பாடம் வைக்கப்பட்டிருக்கிறது. துவக்கப் பள்ளியில் இருந்து இல்லை.

### உள்ளாட்சி மன்றங்களுக்கு சாலை மானியம்

*30. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகரமன்றங்களுக்கும், பேரூராட்சி மன்றங்களுக்கும் தார் சாலை அமைக்க அரசு மானியம் ஏதேனும் அளிக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.